www.Padasalai.Net www.CBSEtips.in

# மாணவ தோழன்

# 7 ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்



## IInd - TERM

## வினா விடைத்தொகுப்பு

www.Padasalai.Net

சமச்சீர் கல்வி புதிய பாடத்திட்டத்தின்படி
தயாரிக்கப்பட்டுள்ளது

-- 2020 --



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# பொருளடக்கம்


| அலகு | வரலாறு | பக்க எண் |
|---|---|---|
| 1 | விஜயநகர், பாமினி அரசுகள் | 2 |
| 2 | முகலாயப் பேரரசு | 5 |
| 3 | மராத்தியர்கள் மற்றும் பீஷ்வாக்களின் எழுச்சி | 8 |
| | புவியியல் | |
| 1 | வளங்கள் | 11 |
| 2 | சுற்றுலா | 15 |
| | குடிமையியல் | |
| 1 | மாநில அரசு | 19 |
| 2 | ஊடகமும் ஜனநாயகமும் | 23 |


மாணவ தோழன்
www.Padasalai.Net

ஆக்கம்

**சி.மகேந்திரன், M.A., B.Ed.**

பட்டதாரி ஆசிரியர் - சமூக அறிவியல்

அரசு உயர்நிலைப்பள்ளி - பரிகம்,

தர்மபுரி மாவட்டம்

**manavathozhan.blogspot.com**

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# வரலாறு

## அலகு - 1 விஜயநகர், பாமினி அரசுகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சங்கம வம்சத்தின் மிக சிறந்த ஆட்சியாளர் யார்?
அ) புக்கர் **ஆ) தேவராயா -II** இ) ஹரிஹரர்-II ஈ) கிருஷ்ண தேவராயர்

2. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?
அ) யானை **ஆ) குதிரை** இ) பசு ஈ) மான்

3. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் யார்?
அ) ராமராயர் ஆ) திருமலதேவராயா
இ) இரண்டாம் தேவராயர் **ஈ) இரண்டாம் விருபாக்சராயர்**

4. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்தவர்
அ) சாளுவ நரசிம்மர் ஆ) இரண்டாம் தேவராயர்
**இ) குமார கம்பண்ணா** ஈ) திருமலைதேவராயர்

5. பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும் விளங்கியவர்
அ) அலாவுதீன் ஹசன்விரா ஆ) முகம்ம து - I **இ) சுல்தான் பெரோஸ்** ஈ) முஜாஹித்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆரவீடு வம்சத்தின் தலை நகரம் **பெனுகொண்டா**
2. விஜயநகரப் பேரரசர்களால் வெளியிட்டப்பட்ட நாணயங்களுக்கு **வராகன்** என்று பெயர்
3. முகமது கவான் வெடிமருந்து தயாரிக்கவும் அதனைப் பயன்படுத்துவது பற்றி விளக்குவதற்காகவும் **பாரசீக** வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார்.
4. விஜயநகர் நிர்வாகத்தில் கிராம விவகாரங்களை **கௌடா** கவனித்தார்.

**III. பொருத்துக**

1) விஜயநகரா - ஒடிசாவின் ஆட்சியாளர்
2) பிரதாபருத்ரா - அஸ்டதிக்கஜம்
3) கிருஷ்ண தேவராயா - பாண்டுரங்க மகா மத்தியம்
4) அப்துர் ரசாக் - வெற்றியின் நகரம்
5) தெனாலிராம கிருஷ்ணா - பாரசீக சிற்ப கலைஞர்

விடை - **1 - வெற்றியின் நகரம், 2 - ஒடிசாவின் ஆட்சியாளர், 3 - அஸ்டதிக்கஜம், 4 - பாரசீக சிற்ப கலைஞர், 5 - பாண்டுரங்க மகா மத்தியம்**

**IV. 1. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:**

**கூற்று** : இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது
**காரணம்**: விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையை கொண்டிருந்தது
அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
**ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**
இ) காரணம் மற்றும் கூற்று தவறு ஈ) காரணம் மற்றும் கூற்று சரி

**2. தவறான இணையைக் கண்டறியவும்**

அ) பட்டு - சீனா
**ஆ) வாசனைப் பொருட்கள் - அரேபியா**
இ) விலை மதிப்பற்ற கற்கள் - பர்மா
ஈ) மதுரா விஜயம் - கங்கா தேவி

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**3. பொருந்தாதைக் கண்டுபிடி:**

அ) ஹரிஹரா -II **ஆ) மகமுது - I** இ) கிருஷ்ண தேவராயர் ஈ) தேவராயா - I

**4. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை ( √ ) டிக் இட்டு காட்டவும்**

I. பச்சை கலந்த நீலவண்ணத்தைக் கொண்ட விலையுயர்ந்த கற்களால் ஆன அரியணை பாரசீக அரசர்களின் அரசவையை அலங்கரித்தன என பிர்தௌசி தன்னுடைய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

II. விஜயநகர , பாமினி அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்குக் கிருஷ்ணா - துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதி மற்றும் கிருஷ்ணா - கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப் பகுதியே காரணமாக அமைந்தன.

III. முதலாம் முகமது முல்தானில் கல்வி பயின்றார்.

IV. முகமது கவான் மூன்றாம் முகமதுவின் கீழ் தனித்தன்மை மிக்க பிரதம அமைச்சராக பணியாற்றினார்.

**அ) I மற்றும் II சரி** ஆ) I, II மற்றும் III சரி இ) II, III , மற்றும் IV சரி ஈ) III மற்றும் IV சரி

**V. சரியா? தவறா?**

1. பாமினி அரசைத் தோற்றுவித்தவர்கள் ஹரிஹரா மற்றும் புக்கர் ஆவார்கள் - **தவறு**
2. இருபது ஆண்டுகள் ஆட்சி செய்த கிருஷ்ணதேவராயர் சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த அரசராவார்- **தவறு**
3. அஸ்டதிக்கஜத்தில் அல்லசானி பெத்தண்ணா குறிப்பிட தகுந்தவராவார் - **சரி**
4. விஜயநகரப் பேரரசில் அரசுரிமை என்ப து பரம்பரையாகவும், பிறப்புரிமையின் அடிப்படையிலும் வழங்கப்பட்டது. - **சரி**
5. பாமினி அரசில் 18 முடியரசுகள் இருந்தன. - **சரி**

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்**

**1. விஜயநகர் பேரரசின் நான்கு வம்சங்களின் மிகச் சிறந்த ஆட்சியாளர்களை எழுதுக.**

- இரண்டாம் ஹரிஹரர், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர், கிருஷ்ணதேவராயர்,

**2. தலைக்கோட்டைப் போரைப் ப ற்றி எழுதுக**

- விஜயநகருக்கு எதிராகப் போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர்.
- 1565 இல் ராக்ச தங்கடி (தலைக்கோட்டைப் போர்) என்றறியப்பட்ட இப்போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.
- தொடர்ந்து நகரம் கொள்ளையடிக்கப்பட்டதோடு பயங்கரமான மனிதப் படுகொலையும் அரங்கேறியது.

**3. விஜயநகர அரசின் அரசமைப்பு முறையைப் பற்றி எழுதுக.**

- பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), கிராமங்கள் என பிரிக்கப்பட்டிருந்தது.
- கிராமமே நிர்வாகத்தின் மிகச்சிறிய அலகாக இருந்தது.
- ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை என்ற அமைப்பிருந்தது

**4. தக்காண சுல்தானத்தின் ஐந்து சுதந்திர அரசுகள் யாவை?**

- பிடார், பீஜப்பூர், அகமதுநகர், பெரார், கோல்கொண்டா

**5. அலாவுதீன் ஹசன் ஷா கல்விக்கு ஆற்றிய பங்களிப்பைக் கூறுக.**

- தமது மகன்கள் கல்வி கற்பதற்காக ஒரு பள்ளியை நிறுவுவதில் சிறப்புக் கவனம் செலுத்தினார்.
- பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் போர்வீரர்களுக்கான கலைகளில் பயிற்சி பெறுவதற்காகப் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தினார்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

VII. **விரிவாக விடையளிக்க**

1. **கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.**

- கிருஷ்ணதேவராயர் மழை நீரைச் சேமிப்பதற்காகப் பெரிய நீர்ப்பாசனக் குளங்களையும், நீர்த்தேக்கங்களையும் உருவாக்கினார்.
- இவர் தமது தலை நகரான ஹம்பியில் கிருஷ்ணசாமி கோவில், ஹசாரா ராமசாமி கோவில், வித்தலசாமி கோவில் போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.
- பெரும்படையொன்றை உருவாக்கிய அவர், பல வலிமை மிக்க கோட்டைகளையும் கட்டினார்.
- போ ர்த்துகீசிய, அராபிய வணிகர்களுடன் அவர் சிறந்த நட்புறவை கொண்டிருந்தார். அதனால் சுங்கவரிகள் மூலம் நாட்டின் வருமானம் அதிகரித்தது.
- கிருஷ்ணதேவராயர் கலை , இலக்கியத்தை ஆதரித்தார். அஷ்டதிக்கஜங்கள் என்றறியப்பட்ட எட்டு இலக்கிய மேதைகள் அவரின் அவையை அலங்கரித்தனர்.
- கிருஷ்ணதேவராயர் அமுக்தமால்யதா (தெலுங்கு) என்னும் காவியத்தையும், ஜாம்பவதி கல்யாணம் (சமஸ்கிருதம்) என்னும் நாடக நூலையும் எழுதினார்.

VIII. **உயர் சிந்தனை வினா**

1. **விஜயநகர் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பாமினி சுல்தான்களின் பங்களிப்பை ஆராய்க.**

- விஜயநகருக்கு எதிராகப் போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர்.
- 1565 இல் ராக்ச தங்கடி (தலைக்கோட்டைப் போர்) என்றறியப்பட்ட இப்போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.
- தொடர்ந்து நகரம் கொள்ளையடிக்கப்பட்டதோடு பயங்கரமான மனிதப் படுகொலையும் அரங்கேறியது.
- அனைத்துக் கட்டடங்களும், அரண்மனைகளும், கோவில்களும் அழிக்கப்பட்டன . அழகிய சிற்பங்களும், நன்கு கலைநயம் மிகுந்த வேலைப்பாடுகளும் சேதப்படுத்தப்பட்டன . இறுதியாக , விஜயநகரப் பேரரசு அழிக்கப்பட்டது.
- ராமராயர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார்.
- ஆரவீடு வம்சத்தார் பெனுகொண்டாவில் புதியதலை நகரை உருவாக்கிப் பேரரசை சில காலம் நல்ல நிலையில் வைத்திருந்தனர்.
- பேரரசில் ஏற்பட்ட உட்பூசல்களாலும் பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்களின் சூழ்ச்சிகளாலும் விஜயநகர அரசு 1646 இல் இறுதியாக வீழ்ச்சியுற்றது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# அலகு - 2 முகலாய பேரரசு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியாவில் பாரசீகக் கட்டிட முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஹுமாயுன் **ஆ) பாபர்** இ) ஜஹாங்கீர் ஈ) அக்பர்
2. அக்பர் ராணாபிரதாப்பை எந்தப்போரில் தோற்கடித்தார் ?
   அ) பானிபட் ஆ) சௌசா **இ) ஹால்டிகட்** ஈ) கன்னோசி
3. ஷெர்ஷா டெல்லியில் யாருடைய அரண்மனையை அழித்தார் ?
   அ) பாபர் **ஆ) ஹிமாயுன்** இ) இப்ராஹிம்லோடி ஈ) ஆலம்கான்
4. மன்சப்தாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஷெர்ஷா **ஆ) அக்பர்** இ) ஜஹாங்கீர் ஈ) ஷாஜஹான்
5. அக்பரின் வருவாய்த்துறை அமைச்சர் யார்?
   அ) பீர்பால் ஆ) ராஜாபகவன்தாஸ் **இ) இராஜாதோடர்மால்** ஈ) இராஜாமான்சிங்

**II. கோடிட்டஇடங்களைநிரப்புக**

1. ராணா பிரதாப்பின் குதிரையின் பெயர் ____________ ஆகும்.
2. பதேபூர் சிக்கியிலுள்ள ------- அரங்கில் அனைத்து சமய வல்லுநர்களும் கலந்துரையாடினார்கள்
3. அக்பரால் மிகவும் போற்றப்பட்ட சூபி துறவி ____________
4. ஜப்தி என்னும் முறை _____ ஆட்சி காலத்தில் தக்காண மாகாணங்களுக்கும் நீட்டிக்கப் பெற்றது.
5. ____________ வரியில்லா நிலங்கள் மத வல்லுநர்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

**விடைகள்:** **1. சேத்தக் 2. இபாதத் கானா 3. சலீம் சிஸ்டி 4. ஷாஜகான் 5. சுயயூர்கள்**

**III. பொருத்துக**

1. பாபர் - அகம்மது நகர்
2. துர்க்காவதி - அஸ்டதிக்கஜம்
3. ராணி சந்த் பீபி - அக்பர்
4. தீன்-இலாஹி - சந்தேரி
5. இராஜாமான் சிங் - மத்திய மகாணம்

**விடைகள்:** **1. சந்தேரி 2. மத்திய மகாணம் 3. அகம்மது நகர் 4. அக்பர் 5. அஸ்டதிக்கஜம்**

**IV. சரியா ? தவறா?**

1. பாபர் மத்திய ஆசியாவில் ஒரு சிறிய அரசான பர்கானாவைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்றார் .
2. ஹிமாயூன் 1565 இல் டெல்லியைக் கைப்பற்றினார்
3. ஔரங்கசீப், ராஜபுதனப் பெண்ணைத் திருமணம் செய்தார்
4. தன் மகன் குஷ்ருவுக்கு உதவினார் என்பதற்காகச் சீக்கியத் தலைவர் குரு அர்ஜுனைத் தூக்கிலிடும் படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார் .
5. ஔரங்கசீப் காலக்கட்டத்தில், முகலாய கட்டடக்கலை சிறப்பு பெற்றது.

**விடைகள்:** **1. சரி 2. தவறு 3. தவறு 4. சரி 5. தவறு**

**V.கீழ்க்காணும் வாக்கியங்களில் பொருத்தமானதை (√ ) டிக் செய்யவும்**

1. **கூற்று:** ஆங்கிலேயர் தங்களது முதல் வணிக மையத்தை சூரத்தில் துவங்கினர்
**காரணம்** : ஜஹாங்கீர் ஆங்கிலேயர்க்கு வணிக உரிமையை வழங்கினார்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

ஆ) காரணம் கூற்றிற்கான தவறான விளக்கம்

இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்று மற்றும் காரணமும் தவறு

2. **கூற்று**: ஔரங்கசீப் மற்ற மதங்களை வெறுத்ததனால் அவருக்கு அவப்பெயர் ஏற்பட்டது

**காரணம்** : ஔரங்கசீப் இந்துக்கள் மீது மீண்டும் ஜெசியா மற்றும் பாதயாத்திரை வரியை விதித்தார்

**அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்**

ஆ) கூற்றிற்குக் காரணம் சரியான விளக்கமல்ல

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் தவறு

**3. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க**

I. கம்ரான் ஆப்கானியரின் மகனாவார். ஹசன்சூரி பீகாரில் உள்ள சசாரத்தின் ஆட்சியாளர் ஆவர்.

II. அக்பர் இந்துக்களின் மீதான ஜெசியா மற்றும் பாதயாத்திரை வரியை ரத்து செய்தார்

III. ஔரங்கசீப் தமது மூன்று சகோதரர்களை கொன்று விட்டு, ஆட்சிக் கட்டிலில்அமர்ந்தார்

IV. இளவரசர் அக்பர், சிவாஜியின் மகனான சாம்பாஜியோடு தக்காணத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார் .

அ) I) II) மற்றும் III) சரி ஆ) II) III) மற்றும் IV) சரி

இ) I) III) மற்றும் IV) சரி **ஈ) II) III) IV) மற்றும் I) சரி**

**4. காலவரிசைப் படி போர்களை வரிசைப்படுத்துக**

i) கன்வா போர் ii) சௌசா போர் iii) கன்னோசி போர் iv) சந்தேரி போர்

**i) கன்வா போர்-1527 ii) சந்தேரி போர்-1528 iii) சௌசா போர்-1539 iv) கன்னோசி போர்-1540**

**5. கீழ்க்காணும் நிர்வாகப்பிரிவை இறங்குவரிசையில் அமைத்திடுக**

i) சர்க்கார் ii) பர்கானா iii) சுபா **விடை: i) சுபா ii) சர்க்கார் iii) பர்கானா**

**VI. பொருத்துக**

| | தந்தை | மகன் |
|---|---|---|
| 1 | அக்பர் | தில்வார் கான் |
| 2 | தௌலத்கான் லோடி | ராணா பிரதாப் |
| 3 | ஹசன்சூரி | ஹிமாயூன் |
| 4 | பாபர் | ஷெர்ஷா |
| 5 | உதயசிங் | ஜஹாங்கீர் |

**விடை: 1. ஜஹாங்கீர் 2. தில்வார் கான் 3. ஷெர்ஷா 4. ஹிமாயூன் 5. ராணா பிரதாப்**

**VII. குறுகிய வினா**

**1. 1526 இல் பானிப்பட் போர் ஏற்பட்டதற்கான சூழலை எழுதுக.**

- தௌலத்கான் லோடியின் மகன் தில்வார்கான், டெல்லி சுல்தானின் மாமனார் ஆலம்கான் ஆகிய இருவரும் காபூல் வந்தனர்.
- டெல்லி சுல்தான் இப்ராகிம்லோடியைப் பதவியை விட்டு நீக்க, பாபரின் உதவி கேட்டே அவர்கள் வந்திருந்தனர்.
- 1526 இல் நடைபெற்றபுகழ்பெற்றமுதலாம் பானிப்பட் போரில் பாபர் இப்ராகிம்லோடியைத் தோற்கடித்து டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.

**2. ஹிமாயூன் 1555 இல் டெல்லியை மீண்டும் கைப்பற்றியதைப் பற்றிக் குறிப்பிடுக**

- பாரசீக அரசர், சபாவிட் வம்சத்தைச் சேர்ந்த ஷா-தாமஸ்ப் என்பவரின் உதவியால் 1555 டெல்லியை மீண்டும் கைப்பற்றுவதில் ஹிமாயூன் வெற்றிபெற்றார் .

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

3. **மன்சப்தாரி முறையைப் பற்றிக் குறிப்பு வரைக.**

- மன்சப்தாரி முறையை அக்பர் அறிமுகம் செய்தார் .
- இம்முறையின் கீழ் பிரபுக்கள், ராணுவ அதிகாரிகள், குடிமைப்பணி அதிகாரிகள் ஆகியோரின் பணிகள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே பணியாக மாற்றப்பட்டன.
- இப்பணியிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு மன்சப் (படிநிலை ,தகுதி அந்தஸ்து) வழங்கப்பட்டது. அப்படியான தகுதியைப் பெற்றவர் மன்சப்தார் ஆவார்.

VIII. **கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1. **முகலாயர்களின் நிலவருவாய் முறையைப் பற்றிவிவரி.**

**ஜப்தி முறை**

- அக்பரின் வருவாய்த்துறை அமைச்சரான ராஜா தோடர்மால் ஆல் ஜப்தி முறை வடக்கு, வடமேற்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- பத்தாண்டு காலத்திற்குச் சராசரி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு (1/3) அரசுக்கு வரியாகச் செலுத்தப்பட வேண்டுமென நிர்ணயம் செய்யப்பட்டது.
- ஷாஜகானின் காலத்தில் ஜப்த் அல்லது ஜப்தி எனும் இம்முறை தக்காண மாகாணங்களுக்கும் நீடிக்கப்பெற்றது.
- ஜாகீர்தார் தம் அதிகாரிகள் மூலம் நிலவரியை வசூல் செய்தார் .

**ஜமீன்தாரி முறை**

- நில உரிமையாளர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்கப் பணியமர்த்தப்பட்டவர்களே ஜமீன்தார்கள் ஆவர்.
- ஜமீன்தார்கள் முகலாய அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோரின் உதவியுடன் நிலவரியை வசூல் செய்தனர்.

2. **அக்பர் கற்றலின் பாதுகாவலன் மதிப்பிடுக.**

- அக்பர் கல்வியைப் பெரிதும் ஆதரித்தார் .
- அவருடைய சொந்த நூலகத்தில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இருந்தன.
- பல்வேறு விதமான நம்பிக்கைகளையும், கருத்துகளையும் கொண்டிருந்த அறிஞர்களை அவர் ஆதரித்தார் .
- அபுல்பாசல், அப்துல்பெய்சி, அப்துர் ரகீம்கான்-இ-கான் ஆகிய நூலாசிரியர்கள் சிறந்த கதை ஆசிரியரான பீர்பால், திறமையான அதிகாரிகளான ராஜாதோடர்மால், ராஜா பகவன்தாஸ், ராஜாமான் சிங் ஆகியோர் அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்தனர்.
- பாடலாசிரியரும் இசை மேதையுமான தான்சென் ஓவியர் தஷ்வந் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்தனர்.

IX. **உயர்சிந்தனைவினா**

1. **முகலாயர் ஆட்சியில் ஷாஜஹானின் காலத்தை மற்ற முகலாய ஆட்சியாளர்களோடு ஒப்பிடுக.**

- முகலாயப் பேரரசும், அதன் புகழும் உன்னதமும் ஷாஜகான்காலத்தில் உச்சத்தை எட்டியது.
- பேரரசர் அமர்வதற்காகச் விலையுயர்ந்த நவரத்தினத் கற்கள் பதிக்கப் பெற்ற மயிலாசனம் தயாரிக்கப்பட்டது.
- யமுனை நதிக்கரையில் உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் எழுப்பப்பட்டது.
- மேலும், ஆக்ராவிலுள்ள முத்து மசூதி (மோதி மசூதி) டெல்லியிலுள்ள மிகப்பெரிய
- ஜும்மா மசூதி ஆகியவை ஷாஜகானால் கட்டப்பட்டவையாகும்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# அலகு - 3 மராத்தியர்கள் மற்றும் பீஷ்வாக்களின் எழுச்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. சிவாஜியின் ஆசிரியராகவும் மற்றும் பாதுகாவலராகவும் இருந்தவர் யார்?
   அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) கவிகலாஷ் இ) ஜிஜாபாய் ஈ) ராம்தாஸ்

2. மராத்திய பிரதம மந்திரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
   அ) தேஷ் முக் ஆ) பீஷ்வா இ) பண்டிட்ராவ் ஈ) பட்டீல்

3. சாம்பாஜியின் தினசரி வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்திய அவருடைய குரு யார்?
   அ) சாகு ஆ) அனாஜி தத்தா இ) தாதாஜி கொண்டதேவ் ஈ) கவிகலாஷ்

4. சிவாஜியின் ராணுவத்தில் ஆரம்பகட்டத்தில் அவருக்குப் பக்கபலமாக இருந்தது
   அ) பீரங்கிப்படை ஆ) குதிரைப்படை இ) காலட்படை ஈ) யானைப்படை

5. குஜராத் மற்றும் மாளவத்தை முகலாய ஆதிக்கத்திலிருந்த விடுபட அவர்களுக்கெதிராக போரை அறிவித்தவர்
   அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) பாஜிராவ் இ) பாலாஜி பாஜிராவ் ஈ) சாகு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மகாராஷ்டிராவில் பரவிய ______________ இயக்கம் மராத்திய மக்களிடையே விழிப்புணர்வும் இணக்கமும் ஏற்பட உதவியது.
2. பீஷ்வாக்களின் முக்கிய வருவாய் அலுவலர் ______________
3. மராத்தியர்களின் குறுகிய காலப் பேரரசு 1761 ஆம் ஆண்டு ______________ இடத்தில் சோகமாய் முடிந்தது.
4. அஷ்டபிரதானில் இடம்பெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ______________
5. சிவாஜியைத் தொடர்ந்து ______________ வுடனான சச்சரவிற்குப் பின்னர் சாம்பாஜி ஆட்சிப் பொறுப்பேற்றார்.

**விடைகள்:** 1. பக்தி இயக்கம் 2. காமவிஸ்தார் 3. பானிப்பட் 4. சுமந்த் 5. அனாஜி தத்தோ

**III. பொருத்துக**

1. ஷாஜி போன்ஸ்லே - சிவாஜியின் தாய்
2. சாம்பாஜி - பீஜப்பூர் தளபதி
3. சாகு - சிவாஜியின் தந்தை
4. ஜீஜாபாய் - சிவாஜியின் மகன்
5. அப்சல்கான் - சிவாஜியின் பேரன்

**விடைகள்:** 1. சிவாஜியின் தந்தை 2. சிவாஜியின் மகன் 3. சிவாஜியின் பேரன் 4. சிவாஜியின் தாய் 5. பீஜப்பூர் தளபதி

**IV. சரியா? தவறா ?**

1. மலை மற்றும் மலைப்பள்ளத்தாக்குகள் மராத்தியர்களை அந்நிய படையெடுப்பாளர்களிடமிருந்து பாதுகாத்தது. சரி
2. பக்தி இயக்கத்தின் மந்திரங்கள் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டது, அனைத்து சமூகத்தினராலும் பக்தி இயக்கப் பாடல்கள் பாடப்பட்டன. தவறு **(மராத்தி)**
3. சிவாஜி புரந்தரை முகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார் சரி
4. தேஷ்முக்குகள் கிராமங்களில் வாழ்ந்தனர், அவர்கள் 20 முதல் 200 வரையிலான கிராமங்களில் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தவறு (20 முதல் 100)
5. அப்தாலி டெல்லியை கைப்பற்றுவதற்கு பத்துமுறை படையெடுத்தார். தவறு (9 **முறை)**

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (√) டிக் இட்டுக் காட்டவும்**

1. **கூற்று:** மராத்தியப் போர்வீரர்கள் தங்கள் வசிப்பிடத்திற்குத் தொலைவில் உள்ள கோட்டைகளிலும், நகரங்களிலும் வாழ்ந்தனர்.

**காரணம்:** மராத்திய வீரர்கள் ஒவ்வோர் ஆண்டும் போர்க்களத்திலிருந்து தங்கள் நிலங்களின் வேளாண் பணிகளுக்காகச் சென்று வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

**அ) கூற்றிற்கான காரணம் சரி** ஆ) கூற்றிற்கான காரணம் தவறு

இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் தவறு

2. **வாக்கியம் - I:** செய்திப்பரிமாற்றக் கடிதங்கள் அடங்கிய கோப்புகளையும், கணக்குப் பதிவேடுகளையும் மதிப்பீடு செய்கையில், ஆவணங்களைத் துல்லியமாகப் பராமரிப்பதில் பீஷ்வாக்கள் கவனமுடன் இருந்தனர்.

**வாக்கியம் - II:** இரண்டாம் பானிப்பட் போரில் பீரங்கிப்படை முக்கியத்துவம் பெற்றிருந்தது

**அ) I சரி** ஆ) II சரி இ) I மற்றும் II சரி ஈ) I மற்றும் II தவறு

3. **பொருந்தாததைக் கண்டுபிடிக்க**

**ரகுஜி,** சாஜி போன்ஸ்லே , சிவாஜி, சாம்பாஜி, சாகு

4. **தவறான இணையைக் கண்டுபிடிக்க**

1. கெய்க்வாட் - பரோடா
2. **பேஷ்வா - நாக்பூர்**
3. ஹோல்கர் - இந்தூர்
4. சிந்தியா - குவாலியர்

5. **காலவரிசைப்படி நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.**

I. சிவாஜி, தம் பாதுகாவலர் இறந்தவுடன் சுதந்திரமான அரசரானார்.

II பாலாஜி பாஜிராவ் அரசப்பதவி ஏற்றார்.

III சிவாசியின் தந்தை இறந்தவுடன் ஜாவலியின் மீது படையெடுத்தார்.

IV பாலாஜி விஸ்வநாத் பீஷ்வாவாக பொறுப்பேற்றார்.

விடை: **I. சிவாஜி, தம் பாதுகாவலர் இறந்தவுடன் சுதந்திரமான அரசரானார்.**
**III சிவாஜியின் தந்தை இறந்தவுடன் ஜாவலியின் மீது படையெடுத்தார்.**
**IV பாலாஜி விஸ்வநாத் பீஷ்வாவாக பொறுப்பேற்றார்.**
**II பாலாஜி பாஜிராவ் அரசப்பதவி ஏற்றார்.**

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்**

1. **மராத்தியர்களிடத்தில் பக்தி இயக்கத்தின் தாக்கம்.**

- மகாராஷ்டிராவில் பரவிய பக்தி இயக்கம், மராத்திய மக்களிடையே விழிப்புணர்வும் இணக்கமும் ஏற்பட உதவியது.
- மேலும், மராத்திய மக்களிடையே ஒற்றுமையைக் குறிப்பாகச் சமூகச் சமத்துவத்தை மேம்படுத்தியது

2. **சௌத் மற்றும் சர்தேஷ் முகி.**

- கொள்ளையடிக்கப்படுவதிலிருந்தும் , சூறையாடப்படுவதிலிருந்தும் மக்களைக் காப்பாற்றினார்.
- அதற்காக அம்மக்கள் **சௌத்** (மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4), பாதுகாப்புக் கட்டணமாக) **சர்தேஷ் முகி** (பத்தில் ஒரு பங்கு (1/10) அரசருக்கான கட்டணமாக) ஆகிய வரிகளைச் செலுத்த வேண்டும்

3. **மராத்தியர்களின் வருவாய் நிர்வாகத்தில் காமவிஸ்தரின் பங்கு.**

- காமவிஸ்தார் பீஷ்வாவால் பணியமர்த்தப்பட்டார்.
- அவரது பணி பாதுகாப்பிற்காக சில வீரர்கள் அடங்கிய படைப்பிரிவை வைத்துக்கொண்டு கப்பம், வரி வசூலிப்பது.

**4. சாம்பாஜிக்கு எதிராக முகலாய இராணுவத்தின் தாக்குதல்.**

- மார்வார் ராத்தோர் குடும்பத்தைச் சேர்ந்த துர்காதாஸ் ஔரங்கசீப்பின் மகன் அக்பர் ஆகியோர் சாம்பாஜியின் அரசவையில் பாதுகாப்பாய் தங்க வைக்கப்பட்டனர்.
- ஔரங்கசீப், சாம்பாஜியை ஒழித்துக்கட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.
- போரில் தோற்கடிக்கப்பட்ட சாம்பாஜி கைது செய்யப்பட்டுச் ஒரு வருடத்திற்கும் சற்றே அதிகமான காலப்பகுதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

**5. 1761 ஆம் ஆண்டில் நடைபெற்ற மூன்றாம் பானிப்பட் போர்.**

- 1761இல் நடைபெற்ற மூன்றாம் பானிப்பட்போரில் ஆப்கா னியர்களின் அரசர் அகமதுஷா அப்தலி மராத்தியரை எதிர்த்து போரிட்டார்.
- ஆப்கானியர்களின் இடம்விட்டு இடம் நகர்ந்து செல்லக் கூடிய பீரங்கிப் படைகள் மராத்திய காலாட்படையினரையும் குதிரைப்படையினரையும் கொன்று குவித்தன.
- மூன்றாம் பானிப்பட்போருக்குப் பின்னர் மராத்தியரின் மேலாதிக்கம் முடிவுக்கு வந்ததது.

**VII. கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிக்கவும்**

**1. மராத்தியர்களின் ஆட்சியில் சிவாஜியின் சிறப்பு அம்சங்களை மதிப்பிடுக.**

- சாஜி பான்ஸ்லேயின் மகனான சிவாஜியே மராத்தியத்தியருக்குப் புகழ் சேர்த்தார்.
- முகலாயரை அச்சமடைய வைத்தார்.
- அவர் வீரம் செறிந்த போர் வீரராகவும் மிகச்சிறந்த தளபதியும், கொரில்லாப் போர் முறைகளுக்கு (மறைந்திருந்து தாக்குதல்) தலைவராகவும் இருந்தார். மனஉறுதி மிக்க மலைவாழ் மக்கள் அணியொன்றை உருவாக்கினார். அவ்வணி அவருக்கு விசுவாசமாக இருந்தது. அவர்களின் உதவியுடன் சிவாஜி பல கோட்டைகளைக் கைப்பற்றினார்.
- ஔரங்கசீப்பின் தளபதிகளுக்குக் கடும்போட்டியாக விளங்கினார்.
- மராத்தியர்களின் வலிமை பெருகியபோது முகலாயப் பேரரசு வலிமை குன்றியது

**VIII. உயர் சிந்தனை வினா**

**1. பீஷ்வா மற்றும் சிவாஜியின் வருவாய் நிர்வாக முறையை ஒப்பிடுக.**

**சிவாஜியின் வருவாய் நிர்வாக முறை**

- கொள்ளையடிக்கப்படுவதிலிருந்தும் , சூறையாடப்படுவதிலிருந்தும் மக்களைக் காப்பாற்றினார்.
- அதற்காக அம்மக்கள் **சௌத்** (மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4), பாதுகாப்புக் கட்டணமாக) **சர்தேஷ் முகி** (பத்தில் ஒரு பங்கு (1/10) அரசருக்கான கட்டணமாக) ஆகிய வரிகளைச் செலுத்த வேண்டும்.
- முகலாயரின் நிர்வாகமுறை சிவாஜியின்மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

**பீஷ்வாக்களின் வருவாய் நிர்வாக முறை**

- பீஷ்வாக்களின் வருவாய்த்துறை நிர்வாகம் காமவிஸ்தார் என்னும் முக்கிய அதிகாரிகளைக் கொண்டிருந்தது.
- வருவாய் வசூலுக்கான ஒப்பந்தங்கள் வருடமொருமுறை ஏலம் விடப்பட்டன.
- முகலாயர்களோடு ஒப்பிடுகையில் பீஷ்வாக்களின் ஆட்சி நவீனமாக இருந்தது.

# புவியியல்

## அலகு - 1 வளங்கள்

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

1. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் புதுப்பிக்கக்கூடிய வளம் ____________

அ) தங்கம் ஆ) இரும்பு இ) பெட்ரோல் **ஈ) சூரியஆற்றல்**

2. மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டம் இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது?

**அ) கமுதி** ஆ) ஆரல்வாய்மொழி இ) முப்பந்தல் ஈ) நெய்வேலி

3. மனிதனால் முதலில் அறியப்பட்டு பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் ஒன்று ________

அ) இரும்பு **ஆ) தாமிரம்** இ) தங்கம் ஈ) வெள்ளி

4. _____ மின் மற்றும் மின்னணுத்துறையில் பயன்படுத்தப்படும் தவிர்க்க முடியாத கனிமங்களுள் ஒன்று.

அ) சுண்ணாம்புக்கல் **ஆ) மைக்கா** இ) மாங்கனீசு ஈ) வெள்ளி

5. நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ____________

**அ) வெப்பசக்தி** ஆ) அணுசக்தி இ) சூரியசக்தி ஈ) நீர்ஆற்றல்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நீர்மின் ஆற்றலின் மிகப்பெரிய உற்பத்தியாளர் **சீனா**
2. தமிழ்நாட்டில் இரும்பு தாதுக்கள் காணப்படும் இடம் **கஞ்சமலை**
3. பாக்ஸைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகம் **அலுமினியம்**
4. மின்சார பேட்டரிகள் தயாரிக்க **தாமிரம் அல்லது மைக்கா** பயன்படுகிறது
5. பெட்ரோலியம் மற்றும் அதன் மூலம் கிடைக்கப்பெறுபவை **கருப்புத்தங்கம்** எனஅழைக்கப்படுகிறது.

**III. பொருத்துக.**

1. புதுப்பிக்கக்கூடிய வளம் - அ. இரும்பு
2. உலோக வளம் - ஆ. மைக்கா
3. அலோக வளம் - இ. காற்றாற்றல்
4. புதைபடிம எரிபொருள் - ஈ. படிவுப்பாறை
5. சுண்ணாம்புக்கல் - உ. பெட்ரோலியம்

**விடை : 1 - இ, 2 - அ, 3 - ஆ, 4 - உ, 5 - ஈ**

**IV. பின்வரும் கூற்றினை கருத்தில் கொண்டு பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்**

**1. கூற்று** : காற்றாற்றல் ஒரு தூய்மையான ஆற்றல்

**காரணம்** : காற்று விசையாழிகள் எந்த உமிழ்வையும் உற்பத்தி செய்யாது

**அ) கூற்று மற்றும் காரணம்சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

**2.கூற்று** : இயற்கை வாயு பெட்ரோலிய படிவங்களுடன் காணப்படுகிறது

**காரணம்** : வீடு மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தலாம்

அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றினை விளக்குகிறது

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

**V. பின்வருவனவற்றிற்கு விடையளிக்கவும்**

**1. வளங்கள் - வரையறு**

மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவை வளங்கள் என அழைக்கப்படுகின்றன.

**2. இரும்பின் பயன்கள் யாவை ?**

- இயந்திர கட்டுமானப்பணி, இயந்திரகருவிகள் ,ஆட்டோமொபைல்ஸ், கப்பல் கட்டுமானப்பணி பாலம் மற்றும் கட்டட கட்டுமானப்பணிகள் ஆகியதுறைகளில் பயன்படுகிறது.

**3. உலகில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் யாவை ?**

- கனடா, வடஅமெரிக்கா, பிரேசில், சீனா, ஜெர்மனி, இங்கிலாந்து, போர்ச்சுகல்

**4. கார்பன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகளைக் கூறு**

- 1.ஆந்த்ரசைட் 2. பிட்டுமினஸ் 3. லிக்னைட் 4. பீட்

**5. துராலுமின் குறித்து சிறுகுறிப்பு வரைக .**

- துராலுமின் என்பது அலுமினியத்துடன் சிறியஅளவிலான பிற உலோகங்களைக் சேர்ப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது.
- இது தூய அலுமினியத்தை விட உயர்ரக (அலாயினை ) உலோக்கலவையாக கிடைக்கிறது.

**VI. பின்வருவனவற்றை வேறுபடுத்தி எழுதுக**

**1. உயிருள்ள வளங்கள் - உயிரற்ற வளங்கள்**

| உயிருள்ள வளங்கள் | உயிரற்ற வளங்கள் |
|---|---|
| உயிரியல் வளங்கள் என்பவை காடுகள், பயிர்கள், பறவைகள் , விலங்குகள் மனிதன் அடங்கிய உயிர்க் கோளத்திலிருந்து பெறப்பட்ட வளங்கள் ஆகும். | உயிரற்ற பொருள்களிலிருந்து பெறப்பட்ட ஒரு வகை வளங்கள் உயிரற்ற வளங்கள் எ ன அழைக்கப்படுகின்றன. |
| எ.கா- நிலக்கரி, பெட்ரோலியம். | எ.கா- நிலம், நீர், சூரிய ஒளி, உலோக தாதுக்கள், காற்று |

**2. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் - புதுப்பிக்க இயலா வளங்கள்**

| புதுப்பிக்கக் கூடிய வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|
| பயன்பாட்டிற்கு பிறகு இருப்பு குறையாது | பயன்பாட்டிற்கு பிறகு இருப்பு குறையும் |
| மாசு ஏற்படுத்தாது | மாசு ஏற்படுத்தும் |
| சூரிய ஆற்றல், காற்றாற்றல், நீர் ஆற்றல். | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு, தாது |

**3. உலோக வளங்கள் - அலோக வளங்கள்**

| உலோக வளங்கள் | அலோக வளங்கள் |
|---|---|
| உலோக வளங்கள் என்பவை உலோகத்தால் ஆன வளங்கள் ஆகும். | உலோகத்தினைக் கொண்டிராத வளங்கள் அலோக வளங்கள் என அழைக்கப்படுகின்றன. |
| இவை வெப்பம் மற்றும் மின்சாரத்தினை எளிதில் கடத்தும் கடினப் பொருள்களாகும். | மின்சாரத்தையும், வெப்பத்தையும் எளிதில் கடத்தாது. கடினமற்றவை |
| (எ.கா ) இரும்பு, தாமிரம், தங்கம், பாக்ஸைட், | (எ.கா ): மைக்கா , சுண்ணாம்புக்கல், ஜிப்சம், |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

VII. **காரணம்கூறுக**

1. **அலுமினியம் மற்ற உலோகங்களுடன் ஒப்பிடும் போது பரவலான பயன்பாட்டினைக் கொண்டுள்ளது.**

❖ அலுமினியமானது எடை குறைந்த , கடினமான மற்றும் விலை குறைந்தது என்பதால் மற்ற உலோகங்களுடன் ஒப்பிடும் போது பரவலான பயன்பாட்டினைக் கொண்டுள்ளது

2. **நீர் ஒரு சிறந்த ஆற்றல் மூலமாக கருதப்படுகிறது.**

❖ நீர்மின்சக்தியானது, மலிவானதாவும் மற்றும் மிகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளதால் நீர் ஒரு சிறந்த ஆற்றல் மூலமாக கருதப்படுகிறது

VIII. **விரிவாக விடையளிக்க**

1. **புதுப்பிக்கக்கூடிய வளங்களின் வெவ்வேறு வகைகளை விளக்குக**

**சூரிய ஆற்றல்**

❖ சூரியன் தனது ஆற்றலை வெப்பமாகவும், ஒளியாகவும் வெளிவிடுகிறது.

❖ சூரிய ஆற்றல் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காது.

❖ ஒளி மின்னழுத்தக்கலம் அல்லது சூரியகலமானது நேரடியாகச் சூரியஆற்றலை மின்னாற்றலாக மாற்றக்கூடியது

**காற்று ஆற்றல்**

❖ காற்றாற்றல் என்பது, ஒரு தூய்மையான ஆற்றலாகும்.

❖ காற்றாற்றலானது, மிகவும் சிக்கனமான மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் தொழில்நுட்பங்களில் ஒன்றாகிவிட்டது.

❖ நவீன காற்று விசையாழிகள் காற்றினை மின்சாரமாக மாற்றுகின்றன.

**நீர்மின்சக்தி**

❖ நீரானது ஒரு முக்கிய ஆற்றல் ஆதாரமாகக் கருதப்படுகிறது.

❖ தற்போது நீரானது நீர்மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

❖ நீர்மின்சக்தி, அதிக திசைவேகத்துடன் நகரும் நீர் மற்றும் பெரிய நீர்வீழ்ச்சிகளில் விசையாழிகள் மற்றும் மின்மாற்றிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

❖ நீர்மின்சக்தியானது, மலிவானதாவும் மற்றும் மிகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

2. **புதுப்பிக்க இயலா வளங்கள் -குறித்து விரிவாக எழுதுக.**

❖ புதுப்பிக்க இயலா வளங்கள் என்பவை ,இயற்கையாக மீண்டும் புதுப்பிக்க முடியாத & காலவோட்டத்தில் மீண்டும் நிறைவு செய்ய இயலாத இயற்கை வளங்கள் ஆகும்.

❖ புதுப்பிக்க இயலா வளங்களின் தொடர் நுகர்தலானது அதன் அழிவிற்கு வழிவகுக்கும்.

**புதுப்பிக்க இயலா வளங்கள் மூன்று வகைப்படும்.அவையாவன:**

❖ உலோக வளங்கள் - இரும்பு, தாமிரம், பாக்ஸைட்,தங்கம், வெள்ளி

❖ அலோக வளங்கள் (அ) உலோகமல்லாத வளங்கள் - மைக்கா , சுண்ணாம்புக்கல், ஜிப்சம்,

❖ புதைபடிம எரிபொருள்கள் - நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு

3. **புதை படிம எரிபொருள் வளங்கள் யாவை ? அவற்றை விளக்குக.**

1. **நிலக்கரி**

❖ நிலக்கரி என்பது, தொல்லுயிர் எச்சங்களில் இருந்து உருவாகும் திண்ம எரிபொருள் ஆகும்.

❖ நிலக்கரி வீட்டு எரிபொருளாக , இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை மற்றும் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பயன்படும் உருளைகளிலும் நீராவி இன்ஜின்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

2. **பெட்ரோலியம்**

- பாறைகளின் அடுக்குகளுக்கு இடையேயும், கடல் மற்றும் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள எண்ணெய் வயல்களில் இருந்தும் துளையிட்டு பெட்ரோலியம் எடுக்கப்படுகிறது
- பெட்ரோலியம் மற்றும் அதன் உபப்பொருள்கள் மதிப்புமிக்கதாக உள்ளதால் 'கருப்புதங்கம்' என அழைக்கப்படுகிறது.

3. **இயற்கைவாயு**

- இயற்கை வாயுவானது பெட்ரோலியம் படிவுகளுடன் காணப்படுகிறது.
- இது வீடு மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது

www.Padasalai.Net
மாணவ தோழன்

# அலகு 2 சுற்றுலா

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

1. சுற்றுலா வகைகளில் மிகப் பழமையானது ____________
   **அ) சமயச் சுற்றுலா** ஆ) வரலாற்றுச் சுற்றுலா
   இ) சாகசச் சுற்றுலா ஈ) பொழுதுபோக்குச் சுற்றுலா

2. எந்த மாநிலத்தில் காசிரங்கா தேசிய பூங்கா அமைந்துள்ளது?
   அ) இராஜஸ்தான் ஆ) மேற்கு வங்காளம் **இ) அசாம்** ஈ) குஜராத்

3. பின்வருவனவற்றில் இந்தியாவில் இல்லாத கடற்கரை எது?
   அ) கோவா ஆ) கொச்சி இ) கோவளம் **ஈ) மியாமி**

4. பின்வருவனவற்றில் இந்தியாவில் இல்லாத பறவைகள் சரணாலயம் எது?
   அ) குஜராத்திலுள்ள நல்சரோவர் ஆ) தமிழ்நாட்டிலுள்ள கூந்தன் குளம்
   இ) இராஜஸ்தானிலுள்ள பாரத்பூர் **ஈ) மத்தியபிரதேசத்திலுள்ள கன்ஹா**

5. எந்த மாவட்டத்தில் குற்றாலம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது?
   அ) தருமபுரி **ஆ) திருநெல்வேலி** இ) நாமக்கல் ஈ) தேனி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மூன்று கூறுகளையும் ஒன்றாக இணைக்கும் கோட்பாடு A3 என அழைக்கப்படுகின்றது.
2. காஸ்ட்ரோனமி **கலாச்சார** சுற்றுலாவின் அம்சத்தை குறிக்கின்றது
3. சுருளி நீர்வீழ்ச்சி **நில நீர்வீழ்ச்சி அல்லது மேகமலை நீர்வீழ்ச்சி** என்றும் அழைக்கப்படுகிறது.
4. இரண்டாவது அழகிய, நீண்டக் கடற்கரை **மெரினா கடற்கரை**
5. TAAI என்பதன் விரிவாக்கம் Travel Agents Association of India (இந்திய பயண முகவர்கள் சங்கம்)

**III. பொருந்தாததை வட்டமிடுக.**

1. **போக்குவரத்து**, ஈர்ப்புத் தலங்கள், எளிதில் அணுகும் தன்மை, அணுகுதல் சேவை வசதிகள்
2. நைனிடால், ஷில்லாங் , மூணாறு, **திகா**
3. கார்பெட், சுந்தர வனம், பெரியார், **மயானி**
4. ஒக்கேனேகல், கும்பகரை, சுருளி, **களக்காடு**
5. ரிஷிகேஷ் , லடாக், குல்மார்க், **கோத்தகிரி**

**IV. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. ஆனை மலை வாசஸ்தலம் | - அ. மேற்கு வங்காளம் |
| 2. குரங்கு அருவி | - ஆ. கோவா |
| 3. டார்ஜிலிங் | - இ. கோயம்புத்தூர் |
| 4. இயற்கையின் சொர்க்கம் | - ஈ. உயர் விளிம்பு |
| 5. அகுதா கடற்கரை | - உ. ஜவ்வாது |

**விடைகள்: 1 - ஈ, 2 - இ, 3 - அ, 4 - உ, 5 - ஆ**

**V. கீழ்க்காணும் வாக்கியங்களில் பொருத்தமானதை (√) டிக் செய்யவும்**

**1. கூற்று:** சுற்றுலா என்பது மக்கள் சமுதாய வாழ்க்கை முறைக்கு ஓர் இன்றியமையாத செயலாக விளங்குகிறது

**காரணம்:** சுற்றுலா நாட்டின் சமூக, கலாச்சார கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**
ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால், கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

2. **கூற்று:** கோவாவிலுள்ள புகழ்பெற்ற கடற்கரைகளுள் ஒன்றான கலங்கட், சாகச விளையாட்டு சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பாகும்.

**காரணம்:** வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் கலங்கட் கடற்கரைக்குக் குவிகின்றார்கள்

**அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால், கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.**

**1. சுற்றுலா வரையறுக்க .**

- சுற்றுலாப் பயணி என்ற சொல், "டூரியன்" என்ற பழமையான ஆங்கிலச் சொல்லிலிருந்து தோன்றியது.
- இது 24 மணி நேரத்திற்குக் குறையாமலும், ஓர் ஆண்டிற்கு மிகாமலும் தனது வழக்கமான சூழலிருந்து பயணிப்பதைக் குறிக்கும்.

**2. சூழல் சுற்றுலா குறித்துச் சிறு குறிப்பு வரைக.**

- பொதுவாக, இயற்கைச் சூழலில் தாவரங்களும், விலங்குகளும் செழித்து வளரும் இடங்களுக்குச் செல்வது 'சூழல் சுற்றுலா' எனப்படுகிறது.
- அமேசான் மழைக்காடுகள், ஆப்பிரிக்க வனப்பயணம் மற்றும் இமயமலை சிகரங்களில் மலையேற்றம்

**3. சுற்றுலாவின் அடிப்படை கூறுகள் யாவை?**

- ™ஈர்ப்புத் தலங்கள் (Attraction)
- ™எளிதில் அணுகும் தன்மை (Accessibility)
- ™சேவை வசதிகள் (Amenities)

இந்த மூன்று கூறுகளையும் இணைக்கும் கோட்பாடு ஆங்கிலத்தில் 'A3' என அழைக்கப்படுகின்றது.

**4. இந்தியாவிலுள்ள ஏதேனும் ஐந்து மலை வாசஸ்தலங்களின் பெயர்களை எழுதுக**

- கொடைக்கானல், ஊட்டி, நைனிடால், டார்ஜிலிங், ஸ்ரீநகர், ஷில்லாங்.

**5. தமிழ்நாட்டிலுள்ள ஏதேனும் ஐந்து கடற்கரையின் பெயர்களை எழுதுக.**

- கோவளம் கடற்கரை, மெரினா கடற்கரை, கன்னியாகுமரி கடற்கரை இராமேஸ்வரம் கடற்கரை, எலியட் கடற்கரை

**VII. வேறுபடுத்துக.**

**1. பன்னாட்டுச் சுற்றுலா மற்றும் வரலாற்றுச் சுற்றுலா**

| | பன்னாட்டுச் சுற்றுலா | வரலாற்றுச் சுற்றுலா |
|---|---|---|
| 1 | சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடவும், அவற்றின் பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றி அறியவும், சேகரிக்கவும் பன்னாட்டுச் சுற்றுலா மேற்கொள்ளப்படுகிறது. | அருங்காட்சியங்கள், நினைவுச் சின்னங்கள் தொல்பொருள் ஆராய்ச்சி பகுதிகள், கோட்டைகள், கோவில்கள் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆகியவற்றினைப் பார்வையிடுவதை மையமாகக் கொண்டுள்ளது. |

**2. சமயச் சுற்றுலா மற்றும் சாகசச் சுற்றுலா**

| | சமயச் சுற்றுலா | சாகசச் சுற்றுலா |
|---|---|---|
| 1 | மக்கள் தனித்தனியாகவோ குழுக்களாகவோ புனித யாத்திரையாகக் கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பிற புனிதஸ்தலங்களுக்குப் பயணம் மேற்கொள்வது. | நெடுந்தொலைவிலுள்ள (அல்லது) அந்நிய இடங்களிலுள்ள வெளிப்புறச் செயல்பாடுகளில் கலந்து கொள்வதற்ககப் பயணப்படுவதே சாகசச் சுற்றுலா எனப்படும். எ.கா: மலையேற்றம், நீர் சறுக்கு |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

3. **ஈர்ப்புத் தலங்கள் மற்றும் எளிதில் அணுகும் தன்மை**

| | ஈர்ப்புத் தலங்கள் | எளிதில் அணுகும் தன்மை |
|---|---|---|
| 1 | **இயற்கை ஈர்ப்புத் தலங்கள்:** நிலம் மற்றும் கடல் அமைப்பு, கடற்கரைகள், காலநிலை மற்றும் காடுகள் ஆகிய கூறுகள் அடங்கும்., | சாலை , இரயில், நீர் மற்றும் வான்வழி போன்ற பல்வேறு வகையான போக்குவரத்தின் மூலம், குறிப்பிட்ட ஓர் ஈர்ப்புத் தலத்தை எளிதில் அடைவதாகும். |
| 2 | **கலாச்சார ஈர்ப்புத் தலங்கள்:** வரலாற்று நினைவுச் சின்னங்களையும், பிற அறிவார்ந்த படைப்புகளையும் உள்ளடக்கியதாகும் | குறிப்பிட்ட ஓர் ஈர்ப் புத்தலத்தை அடைவதற்கான பயணச் செலவையும் நேரத்தையும் போக்குவரத்து தீர்மானிக்கிறது |

VIII. **பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்**

1. **சுற்றுலாவின் புவியியல் காரணிகளை விளக்குக**

1. **நிலத் தோற்றம்**: மலைகள், பீடபூமிகள், ஆழ்பள்ளத்தாக்குகள், பள்ளத்தாக்குகள், குகைகள், மணல் குன்றுகள், பனியாற்று நாற்காலி (Cirque) பவளப்பாறைகள், ஓங்கல்கள்
2. **நீர்நிலைகள்:** ஆறுகள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள் வெந்நீர் மற்றும் கொதிநீர் ஊற்றுகள், பனி மற்றும் பனியாறுகள், நீரோட்டங்கள் ஓதங்கள் மற்றும் அலைகள்.
3. **தாவரங்கள்:** காடுகள், புல்வெளிகள், பெருவெளிகள், பாலை வனங்கள்.
4. **காலநிலை:** சூரிய ஒளி, மேகங்கள், சிறந்த வெப்பநிலை , மழைப்பொழிவு மற்றும் பனி.
5. **விலங்குகள்:** அ) வனவிலங்குகள், பறவைகள் சரணாலயம், வனவிலங்குப் பாதுகாப்புச் சரணாலயம், மிருகக்காட்சி சாலை. ஆ) வேட்டையாடுதல் மற்றும் மீன்பிடித்தல்
6. **குடியிருப்புக் காரணிகள்**: அ) நகரங்கள், மாநகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆ) வரலாற்று அழிவு எச்சங்கள், நினைவுச்சின்னங்கள்
7. **கலாச்சாரம்:** மக்களின் வாழ்க்கை முறை , பாரம்பரியம், நாட்டுப்புற வழக்கங்கள், ஓவியங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

2. **தமிழ்நாட்டிலுள்ள நீர்வீழ்ச்சிகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

1. **ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி**: தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் அழகான நீர்வீழ்ச்சி
2. **கும்பக்கரை நீர்வீழ்ச்சி**: பாம்பார் ஆற்றில் சிற்றருவிகளாக உருவாகி, கொடைக்கானல் மலை அடிவாரத்தில் இந்நீர்வீழ்ச்சி வீழ்கின்றது. இது தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
3. **குரங்கு நீர்வீழ்ச்சி**: பசுமை மாறாக் காடுகள் சூழ்ந்த இந்நீர்வீழ்ச்சி கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனை மலைப் பகுதியில் அமைந்துள்ளது.
4. **கிளியூர் நீர்வீழ்ச்சி**: கிழக்குத் தொடர்ச்சி மலையான சேர்வராயன் குன்றுப் பகுதியில் அமைந்துள்ளது.
5. **குற்றாலம்**: திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குற்றால அருவி, மருத்துவம் ஆரோக்கியத்திற்குப் பெயர் பெற்றது.
6. **ஆகாய கங்கை**: கிழக்குத் தொடர்ச்சி மலையிலுள்ள கொல்லிமலையில் புளியசோலை என்னுமிடத்தில் இந்நீர்வீழ்ச்சி வீழ்கின்றது. இது நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது
7. **சுருளி நீர்வீழ்ச்சி**: இந்த நீர்வீழ்ச்சி நிலநீர்வீழ்ச்சி அல்லது மேகமலை நீர்வீழ்ச்சி என அழைக்கப்படுகிறது. இது தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

3. **சுற்றுலாவின் சுற்றுச்சூழல் தாக்கத்தை விவரிக்கவும்**

**நேர்மறையான தாக்கம்**

- ™நேரடியான நிதி பங்களிப்பு
- ™அரசாங்க நிதிக்குப் பங்களிப்பு
- ™மேம்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் திட்டமிடல்
- ™சுற்றுச்சூழல் விழிப்புணர்வை அதிகரித்தல்
- ™பாதுகாப்பு மற்றும் பராமரிக்கப்பட்ட சுற்றுச்சூழல்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**எதிர்மறை தாக்கம்**

1. **இயற்கை வளங்கள் சிதைவுறுதல்**
   - ❖ நீர் வளங்கள், உள்ளூர் வளங்கள், நிலச் சீரழிவு
2. **மாசுபடுதல் (மாசு, தூய்மைக்கேடு)**
   - ❖ ™ காற்று மற்றும் ஒலி மாசு, திடக்கழிவு மற்றும் குப்பைகள், கழிவுநீர்
3. **சுற்றுச்சூழல் அமைப்பின் அழிவு மற்றும் மாற்றம்**
   - ❖ காற்று, நீர், மண்

IX. **சிந்தனை வினா** (HOTS)

1. **இயற்கைக் காட்சிகளைப் பார்வையிடுவதை நாம் ஏன் விரும்புகிறோம்?**
   - ❖ சுற்றுலாவில் இயற்கைக் காட்சிகள் மிகவும் முக்கியமான காரணியாகும்.
   - ❖ இயற்கைக் காட்சிகளான மலைகள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள், பனியாறுகள், காடுகள் மற்றும் பாலை வனங்கள் ஆகியவை மக்களைக் கவரும் முக்கிய கூறுகளாகும்.

2. **சரணாலயங்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் யாவை?**
   - ❖ ஆக்கிரமிப்புகளை தடைசெய்ய கடுமையான சட்டங்கள் பிறப்பித்தல்
   - ❖ காடு வளர்ப்புத் திட்டங்களை ஊக்குவித்தல்
   - ❖ விலங்கினங்களை வேட்டையாடுதலை தடை செய்தல்

3. **பயணம் செய்வதற்கான ஐந்து காரணங்களைப் பட்டியலிடுக.**
   - ❖ மதம், பொழுதுபோக்கு, வாணிகம், வரலாறு மற்றும் பண்பாடு

மாணவ தோழன் www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# குடிமையியல்

## அலகு - 1 மாநில அரசு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

1. மாநில சட்டமன்றத்தின் உறுப்பினராவதற்கு குறைந்தபட்ச வயது
அ) 18 வயது ஆ) 21 வயது **இ) 25 வயது** ஈ) 30 வயது

2. இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை
அ) 26 ஆ) 27 இ) 28 **ஈ) 29**

3. மாநில அரசு என்பது
அ) மாநில அரசின் துறைகள் ஆ) சட்டமன்றம்
**இ) அ மற்றும் ஆ** ஈ) இவற்றில்எதுவுமில்லை

4. மாநில அரசு நிர்வாகத்தின் ஒட்டுமொத்த தலைவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் **இ) ஆளுநர்** ஈ) முதலமைச்சர்

5. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர்
அ) குடியரசுத்தலைவர் ஆ) பிரதமர் **இ) ஆளுநர்** ஈ) தேர்தல் ஆணையர்

6. முதலமைச்சர் என்பவர்
**அ) பெரும்பான்மை கட்சியின் தலைவர்** ஆ) எதிர்க்கட்சிதலைவர்
இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில்எதுவுமில்லை

7. மாநில அரசின் மூன்று முக்கிய நிர்வாக பிரிவுகள்
அ) மேயர் , ஆளுநர், சட்டமன்ற உறுப்பினர் ஆ) ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி
இ) கிராமம், நகரம், மாநிலம் **ஈ) சட்டமன்றம், நிர்வாகத்துறை , நீதித்துறை**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. **குடியரசுத்தலைவர்** ஆல் ஆளுநர் நியமிக்கப்படுகிறார்
2. சட்டமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் **முதலமைச்சர்** ஆக நியமிக்கப்படுகிறார்
3. மாநில அரசின் உச்சபட்ச நீதி அமைப்பு **உயர்நீதிமன்றம்**
4. ச.ம.உ என்பதன் விரிவாக்கம் **சட்டமன்ற உறுப்பினர்**
5. ஒரு குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த அனைத்து வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுபவர் **சட்டமன்ற உறுப்பினர்** ஆவார்
6. சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆளுங்கட்சியை சாராதவராக இருப்பின் **எதிர்க்கட்சி உறுப்பினர்** என்று அழைக்கப்படுவர் .

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சட்டமன்ற உறுப்பினர்கள் | - | a) தலைமைச் செயலகம் |
| 2. ஆளுநர் | - | b) 7 |
| 3. முதலமைச்சர் | - | c) மாநிலத்தின் தலைவர் |
| 4. யூனியன் பிரதேசங்கள் | - | d) சட்டமன்றம் |
| 5. புனித ஜார்ஜ் கோட்டை | - | e) பெரும்பான்மை கட்சித் தலைவர் |

**விடை 1 - d, 2 - c, 3 - e, 4 - b, 5 - a**

**IV. கீழ்க்காணும் வாக்கிங்களில் சரியானவற்றை (✓) டிக் செய்யவும்**

1. கீழ்காணும் வாக்கியங்களில் தவறானவை
அ) ஆளுநராக இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்
**ஆ) 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்**
இ) நல்ல மனநலமுடையவராக இருத்தல் வேண்டும்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ஈ) இலாபம் தரும் எந்த பதவியிலும் இருத்தல் கூடாது

2. கீழ்காணும் வாக்கியங்கள் சரியா தவறா என்பதை ஆராய்க

அ) அரசு செயல்படுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடையவர்கள் ஆவார்கள் **சரி**

ஆ) ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை சாராத அனைத்து அரசியல் கட்சியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்கட்சி உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுவர். **சரி**

இ) சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் அல்ல. **தவறு**

3. ஈரவை என்பதற்கு சரியான விளக்கத்தை தேர்ந்தெடு

அ) இரு முதலமைச்சர்களை கொண்ட சட்டமன்றம்

ஆ) ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை கொண்ட சட்டமன்றம்

**இ) மேலவை மற்றும் கீழவையை கொண்ட சட்டமன்றம்**

ஈ) கவர்னரை தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட அவை

4. **கூற்று:** இந்தியா கூட்டாட்சி முறை அரசாங்கத்தை கொண்டது

**காரணம்** : இந்திய அரசியலமைப்பின் அதிகாரம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**அ) கூற்றுசரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது**

ஆ) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கம் சரியல்ல

இ) கூற்று சரி, விளக்கம் தவறு

ஈ) கூற்று மற்றும் விளக்கம் தவறு

## V. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்

**1. மாநில ஆளுநராவதற்கான தகுதிகள் யாவை ?**

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 35 வயது நிறைவடைந்தவராக இருக்க வேண்டும்.
- எவ்வித வருவாய் தரும் எந்த ஒரு அரச பதவியிலும் இருக்கக்கூடாது.

**2. எதிர்க்கட்சியினர் என்று அழைக்கப்படுபவர்கள் யார்?**

- ஆளும்கட்சியைச் சேராத வேறு பல கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினர் என அழைக்கப்படுவர் .

**3. லோக் அதாலத் பற்றி எழுதுக.**

- லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் நிலுவையிலுள்ள வழக்குகளை சமாதான நிலை மற்றும் சமரசம் மூலம் தீர்க்க இந்திய அரசால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும்.

**4. சட்டமன்ற தொகுதி என்றால் என்ன?**

- தேர்தலுக்காக ஒவ்வொரு மாநிலமும் மக்கள்தொகையைப் பொருத்துப் பல தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை சட்டமன்ற தொகுதிகள் எனப்படும்

**5. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர் யார்?**

- ஆளுநர், பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிக்கிறார்.
- முதலமைச்சரின் ஆலோசனையின் படி ஏனைய அமைச்சர்களையும் ஆளுநரே நியமிக்கிறார்.

## VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்

**1. ஆளுநரின் அதிகாரத்தை விவரிக்கவும்?**

- மாநிலச் சட்டமன்றத்தின்/ ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக ஆளுநர் செயல்படுகிறார்.
- இவர் , மாநில நிர்வாகத்துறையின் தலைவராகவும் மகத்தான அதிகாரங்களை உடையவராகவும் திகழ்கிறார்.

- மாநில அரசாங்கத்தின் அனைத்து நிர்வாகத்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரால் நடைபெறுகின்றன.
- மாநிலத்திலுள்ள அரசுப் பல்கலைக்கழகங்களின் வேந்தராகவும் அவர் இருக்கிறார்.
- மாநிலச் சட்டத்துறையால் இயற்றப்படுகிற அனைத்துச் சட்ட முன்வரைவுகளும் (மசோதாக்களும்) அவரின் ஒப்புதலுக்குப் பின்னரே சட்டமாகின்றன.
- மாநிலத் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் , உறுப்பினர்கள் , மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர் , அரசுப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் போன்றோரையும் ஆளுநரே நியமிக்கிறார்.

**2. சட்டமன்ற உறுப்பினர் என்பவர் யார்?**

- ஒவ்வொரு தொகுதியிலும் தங்களுடைய வேட்பாளரை அரசியல் கட்சிகள் நிறுத்துகின்றன.
- அந்தத் தொகுதியைச் சேர்ந்த 18 வயது நிறைவடைந்தவர்கள் ,தங்கள் வாக்குகளை தங்களுக்கு பிடித்த வேட்பாளர்களுக்கு அளிக்கின்றனர்.
- அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பெறும் வேட்பாளரே வெற்றி பெறுகிறார்.
- அவ்வாறு வெற்றி பெற்றவரே சட்டமன்ற உறுப்பினராவார்.

**3. முதலமைச்சர் மற்றும் காபினெட் அமைச்சர்களின் பணிகள் யாவை ?**

- மாநில நிர்வாகத்துறையின் உண்மையான தலைவராக முதலமைச்சர் செயல்படுகிறார்.
- முதலமைச்சர் , தனது அமைச்சர்களுக்கு இலாகாக்களை ஒதுக்கீடு செய்கிறார்.
- அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் மாநிலச் சட்டசபைக்குப் பொறுப்புடையவர்களாக உள்ளனர்.
- அவர்கள் அனைவரும் முதலமைச்சரின் தலைமையின்கீழ் ஒரு குழுவாக இணைந்து செயல்படுகின்றனர்.
- மக்களின் நலனுக்கானத் திட்டங்களையும் கொள்கைகளையும் முதலமைச்சர் வகுக்கிறார்.

**VII. உயர் சிந்தனை வினாக்கள்**

**1. மாநில அரசின் சில துறைகளின் பெயர்களை குறிப்பிடுக.**

- வருவாய் துறை
- பள்ளிக் கல்வித் துறை
- மக்கள் நலவாழ்வு (ம) குடும்ப நலத்துறை
- உயர்கல்வி துறை
- நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
- பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
- தகவல் தொழில் நுட்பவியல் துறை
- தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு துறை
- நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
- பொதுப்பணித் துறை

2. **அட்டவணைப்படுத்துக**

**ஆளுநர், முதலமைச்சர் , மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதிகள், நியமனமுறை மற்றும் ஏதாவது இரண்டு அதிகாரங்கள்**

| | **தகுதிகள்** | **நியமனமுறை** | **அதிகாரங்கள்** |
|---|---|---|---|
| **ஆளுநர்** | 35 வயது நிறைவடைந்தவராக இருக்க வேண்டும். எவ்வித வருவாய் தரும் எந்த ஒரு அரச பதவியிலும் இருக்கக்கூடாது. | ஆளுநரை நியமிப்பவர் குடியரசுத் தலைவர். உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைப்பார் | மாநில அரசின் செயல்பாடு குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கைகள் அனுப்புகிறார். மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் போது, மாநில நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்கிறார் |
| **முதலமைச்சர்** | 25 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும் சட்டமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் | சட்டப்பேரவையில் எந்தக் கட்சி அல்லது எந்த அணி பெரும்பான்மை பெற்றுள்ளதோ, அந்தக் கட்சியின் தலைவர் அல்லது அணியின் தலைவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கிறார். | அமைச்சரவையின் தலைவராய் இருந்து, அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது. ஆளுநர் மற்றும் அமைச்சர்களுக்கு இடையே தொடர்பாளராக செயல்படுதல் |
| **சட்டமன்ற உறுப்பினர்கள்** | 25 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும் எவ்வித வருவாய் தரும் எந்த ஒரு அரச பதவியிலும் இருக்கக்கூடாது. | சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற வேட்பாளர் சட்டமன்ற உறுப்பினராக பேரவைத் தலைவரின் முன்னிலையில் பதவி பிரமானம் செய்து கொள்கிறார். | தான் சார்ந்த தொகுதியின் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துதல். சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்றல். |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

## அலகு - 2 ஊடகமும் ஜனநாயகமும்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி **இ) செய்தித்தாள்** ஈ) இணைய தளம்

2. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது
   அ) இதழ்கள் ஆ) அறிக்கைகள் இ) நாளிதழ்கள் **ஈ) வானொலி**

3. உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம்
   அ) தட்டச்சு **ஆ) தொலைக்காட்சி** இ) தொலைப்பேசி ஈ) இவற்றில் எதுவும் இல்லை

4. வெகுஜன ஊடகம் என்ப து
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி **இ) அ மற்றும் ஆ** ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்
   அ) நிறைய பணம் ஈட்ட ஆ) நிறுவனத்தை ஊக்கப்படுத்த
   **இ) நடுநிலையான தகவலை தருவதற்கு** ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. உலகத்தினை சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது **தொலைக்காட்சி**
2. ஒவ்வொரு தனிமனிதனும் **ஊடகத்தின் வெளிப்பாடு** ஆகும்
3. அச்சு இயந்திரம் **ஜோஹன்ஸ் குட்டன்பர்க்** என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட து
4. நமது வாழ்க்கையை தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு **நெறிமுறை** ஆகும்.
5. இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் **அகில இந்திய வானொலி (ஆகாசவாணி)**

**III. பொருத்துக.**

1. குறு அளவிலான ஊடகம் - கூகுள் இணையம்
2. சமூக ஊடகம் - சுவரொட்டிகள்
3. அச்சு ஊடகம் - கருத்தரங்கு
4. இணைய ஊடகம் - திரைப்படங்கள்
5. ஒலிபரப்பு ஊடகம் - முகநூல்

**விடைகள்: 1. கருத்தரங்கு 2.முகநூல் 3.சுவரொட்டிகள் 4. கூகுள் இணையம் 5. திரைப்படங்கள்**

**IV. கீழ்க்காணும் வாக்கிங்களில் சரியானவற்றை (√) டிக் செய்யவும்**

1. **கூற்று**: அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் என கருதப்படுகிறது.
**காரணம்**: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும், கல்வியறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.
   **அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.**
   ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல .
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

**2. தவறான ஒன்றை கண்டுபிடிக்க**
அ) செய்தித்தாள்கள் ஆ) நாளிதழ்கள் இ) அறிக்கைகள் **ஈ) டிவிட்டர்** உ) சுவரொட்டிகள்

**3. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும்**
   அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் சாதனம் ஆகும்
   ஆ) ஊடகம் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்

இ) ஊடகம் மக்களிடம் பொது கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது
ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது

i) அ, ஆ மற்றும் இ சரி ii) அ, ஆ மற்றும் ஈ சரி
iii) ஆ, இ மற்றும் சரி iv) அ, ஆ மற்றும் ஈ சரி

**V. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்**

**1. ஊடகம் என்றால் என்ன ?**

- ஊடகம் என்பது ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக் கூடிய சாதனமாகும்.
- ஊடகம் என்பது அச்சு, ஒலி, ஒளி என அனைத்துவகை பரப்பு சாதனங்களையும் உள்ளடக்கியதே ஆகும்.

**2. சட்ட மன்றத்தின் செயல்பாடுகளை மக்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள்?**

- சட்ட மன்றத்தின் செயல்பாடுகளை மக்கள் ஊடகத்தின் மூலம் அறிந்து கொள்கிறார்கள்

**3. உள்ளூர் ஊடகத்தின் முக்கியத்துவம் யாவை ?**

- பொதுவாக ஊடகம் என்பது தேசிய மற்றும் உலக செய்திகளை அளிப்பதாகும்.
- உள்ளூர் ஊடகம் என்ப து ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படுவதாகும்.

**4. ஜனநாய கத்தின் நான்காவது தூண் ஊடகம் நிரூபிக்கவும்**

- சட்ட மன்ற ம், நிர்வாகத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக கருதப்படுகிறது.
- ஊடகம் மற்ற மூன்று துறை செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

**5. ஊடகத்தின் ஏதாவது இரண்டு பொறுப்புகளைக் கூறுக**

- ஊடகங்களின் அடிப்படை நோக்கமானது நேர்மையான, துல்லியமான, நடுநிலையான, நாகரீகமான மற்றும் நல்ல மொழிநடையில் மக்கள் நலன் சார்ந்த தகவல்கள், செய்திகள், கருத்துகள் ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதாகும்.
- ஒரு அரசு சிறப்பாக செயல்படுவதற்கு விழிப்பான மற்றும் சுதந்திரமான ஊடகம் மிகவும் அவசியமாகும்

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்**

**1. ஊடகத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்**

| | |
|---|---|
| குறுகிய தொடர்பு ஊடகம் | கேபிள் தொலைக்காட்சி, நேரடி அஞ்சல், கருத்தரங்கு |
| தொலைத் தொடர்பு ஊடகம் | திரைப்படங்கள் தொலைக்காட்சி, வானொலி |
| அச்சு ஊடகம் | செய்தித்தாள்கள், இதழ்கள், பத்திரிக்கைகள் புத்தகங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள் |
| இணைய ஊடகம் | கூகுள் இணைய தளங்கள் மற்றும் வலைப்பதிவுகள் |
| சமூக ஊடகம் | ட்விட்டர், முகநூல், வாட்ஸ் ஆப் மற்றும் இன்ஸ்டாகிராம் |

**2. ஜனநாயகத்தில் ஊடகம் எவ்வாறு முக்கிய பங்காற்றுகிறது?**

- ஊடகமானது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும்.
- நமது ஜனநாயக சமுதாயத்தில் ஊடகம் பொதுமக்களின் கருத்துக்களை செயல்படுத்தும் உந்துசக்தியாகும்.
- இது ஜனநாயகத்தின் மதிப்புகளை பலப்படுத்துகிறது.
- இது மக்களுக்கு அறிவையும், வலிமையும் அளிக்கிறது.
- மேலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வையும், ஏற்படுத்துகிறது.
- அரசின் வெளிப்படைத்தன்மையும், அவற்றின் பொறுப்பினையும் உறுதி செய்கிறது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

- ஊடகம் அரசின் ஒவ்வொரு செயல்பாட்டினையும் மக்களிடம் எடுத்துச்செல்கிறது. இதன் மூலம் அரசின் செயல்பாடுகளையும் மக்களின் அன்றாட நிகழ்வுகளையும் குடிமக்கள் அறிந்துகொள்கிறார்கள்.

3. **ஊடகத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?**

- ஒரே பிரச்சினைகளுக்குப் பல்வேறு கருத்துக்களை பெற முடிகிறது.
- ஊடகமானது மக்களுக்கு அரசு நிறைவேற்றாத வாக்குறுதிகளை நினைவூட்டுகிறது.
- இது கிராமப்புற மக்களுக்கு கல்வி அளிக்கிறது.
- பாராளுமன்றம் மற்றும் ஜனநாயகம் ஆகிய இரண்டும் ஊடகத்தின் கண்காணிப்பில் இருந்தால் மட்டுமே வலிமை
அடையும்.
- ஊடகம் அறிக்கைகள் அளிப்பது மட்டுமல்லாது அரசிற்கும் மக்களுக்கும் இணை ப்பு பாலமாக செயல்படுகிறது. மேலும் ஊடகம் அரசாங்கத்தை கண்காணிக்கும் பணியையும் செய்கிறது.
- ஊடகம் இல்லாத ஜனநாயகம் என்பது சக்கரம் இல்லாத வாகனத்திற்கு ஒப்பாகும்.

www.Padasalai.Net மாணவ தோழன்

# வரைபடங்கள்

## விஜயநகர், பாமினி அரசுகள்

1. விஜயநகர் மற்றும் பாமினி அரசுகளின் எல்லைகளைக் குறிப்பிடுக.



## முகலாயப் பேரரசு

1. முகலாயப் பேரரசில் அக்பர் மற்றும் ஔரங்கசீப்பின் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளைக் குறிக்கவும், முகலாயர்களின் முக்கிய போர்களைக் குறிக்கவும்




ஔரங்கசீப் பேரரசு
வ
மே
கி
தெ
காபூல்
பெஷாவர்
காஷ்மீர்
பானிப்பட்
தில்லி
ஆக்ரா
ரஜபுத்திரர்
அஜ்மீர்
மாளவம்
குஜராத்
அலகாபாத்
பாட்னா
வங்காளம்
அசிர்கர்
அகமதுநகர்
டையூ
மும்பை
கோண்டுவானா
புரந்தர்
பீஜப்பூர்
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
கோவா
வேலூர்
செஞ்சி
கள்ளிக்கோட்டை
தஞ்சாவூர்
கொச்சின்
பாளையக்காரர்கள் பகுதி
லட்சத் தீவுகள் (இந்தியா)
இலங்கை
இந்தியப் பெருங்கடல்
அளவையில் இல்லை

## மராத்தியர்கள் மற்றும் பீஷ்வாக்களின் எழுச்சி

1. மராத்தியப் பேரரசின் முக்கிய நகரங்கள் மற்றும் கோட்டைகளைக் குறிப்பிடுக.



## வளங்கள்

**உலக நில வரைபடத்தில் உலோக வளங்கள் பரவிக் கிடைக்கும் இடங்களைக் குறித்திடுக.**



www.Padasalai.Net
மாணவ சேவையே மகேசன் சேவை